# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 360 | 4 Pages | 22.7.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 360 | 4 பக்கங்கள் | 22.7.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# பொன்னானி ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சிறுவன்

## முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவித்தார்

சென்னை, ஜூலை 22

நீலகிரி மாவட்டம், சேரங்கோடு கிராமம், பாலவயல் பகுதியிலுள்ள பொன்னானி ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், "நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம். நெல்லியாளம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன். குணசேகரன் (18) த/பெ.குமார் என்பவர் பிற்பகல் 01.30 மணியளவில் சேரங்கோடு கிராமம், பாலவயல் பகுதியிலுள்ள பொன்னானி ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையும் அடைந்தேன். மேலும், இச்சம்பவத்தில்உயிரிழந்தசிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு.உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2026 சட்டமன்ற தேர்தல்: திமுக தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஆலோசனை

சென்னை, ஜூலை 22

2026 சட்ட மன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் 5 பேர் கொண்ட திமுக ஒருங்கிணைப்பு குழுவை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார். இந்த குழுவில் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் ஏ.வ.வேலு, தங்கம் தென்னரசு, இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.இந்த குழுவினர் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இதைத்தொடர்ந்து இன்று மாலை 6 மணிக்கு ஒருங்கிணைப்பு குழுவில் இடம்பெற்றுள்ள 5 பேரும் அண்ணா அறிவாலயத்தில் கூடி அடுத்து என்னென்ன பணிகளில் ஈடுபட வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்க உள்ளனர். வர இருக்கும் 2026 சட்ட மன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தி.மு.க.வில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள், அமைப்பு ரீதியான சீரமைப்புகளை செய்ய தி.மு.க. தலைவருக்கும், தலைமைக்கும் பரிந்துரைப்பது, கட்சி நிர்வாகிகளிடம் இருந்து வரும் புகார்களை விசாரிப்பது உள்ளிட்ட பணிகளை இக்குழு மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது.



அதுமட்டுமின்றி அமைப்பு ரீதியாக மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் மாவட்டங்களை மேலும் பிரித்து புதிய மாவட்டச் செயலாளர்களை நியமிப்பது உள்ளிட்ட பணிகளை இக்குழு மேற்கொள்ள இருக்கிறது. இதன் காரணமாக ஒருங்கிணைப்பு குழுவின் முதல் கூட்டம் அறிவாலயத்தில் இன்று மாலை நடைபெற இருக்கிறது.

## பாமகவினர் மீது பதியப்பட்டுள்ள வழக்கை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்: டிடிவி தினகரன்

சென்னை, ஜூலை 22

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"மின் கட்டண உயர்வை கண்டித்து போராட்டம் நடத்திய பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது வழக்குப்பதிவு திமுக அரசின் ஜனநாயக விரோதப் போக்கு கடும் கண்டத்திற்குரியது.

தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் மூன்றாவது முறையாக உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டண உயர்வைக் கண்டித்து சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே அறவழியில் போராட்டம் நடத்திய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் உட்பட அக்கட்சியினர் பலர் மீது காவல்துறை வழக்குப்பதிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் நாள்தோறும் அரங்கேறும் கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்டசட்டம்ஒழுங்குசீர்கேடுகளை களையவோ, பள்ளி, கல்லூரி மாணவர்களின்எதிர்காலத்தைசிதைக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசு, ஜனநாயக முறையில் போராட்டம் நடத்திய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் உட்பட பலர் மீது வழக்குப்பதிவு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது. எனவே, பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் உட்பட அக்கட்சியினர் பலர் மீது பதியப்பட்டுள்ள வழக்கை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என காவல்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்."



இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## இளைஞரணிப் படையை வழிநடத்திச் செல்லும் உதயநிதிக்கு முதல்அமைச்சர் வாழ்த்து



சென்னை, ஜூலை 22

திமுக இளைஞரணி இன்று 45ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்த நிலையில், இது தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"45ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது திமுக இளைஞரணி.இளைஞரணிப்படையைச்சிறப்பாகவழிநடத்திச் செல்லும் தம்பி

உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டுகள்! வாழ்த்துகள்!


கழகக் கொள்கைகளையும் வரலாற்றையும் இன்றைய இளைஞர்களுக்கு ஏற்றாற்போல் எடுத்துச் சென்று, அவர்களை அரசியல்விழிப்புணர்வும்கொள்கைத்தெளிவும்பெற்றவர்களாக வார்த்தெடுப்பீர்கள் எனக் கழகத் தலைவராக நம்புகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் ஊராட்சியில் சிறப்பு கிராம சபைகூட்டம்ஊராட்சிமன்றதலைவர்அபர்ணாரவிசங்கர்தலைமையில்நடைபெற்றது. இதில் செஞ்சி ஒன்றிய குழு பெருந்தலைவர்வி ஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் KSM மொக்தியார் மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

## அரிய வகை நோயால் அவதி: எப்போதும் முக கவசத்துடன் இருக்கும் 11 வயது சிறுவன்



பார்சிலோனா, ஜூலை 22

மனித உடலின் மேல் சில மணி நேரமாவது சூரிய ஒளி படவேண்டும். அப்பொழுது தான் உடலுக்கு தேவையான வைட்டமின் டி கிடைக்கும் என கூறுவார்கள்.

ஆனால் ஸ்பெயினின் பார்சிலோனாவில் வசிக்கும் பால் டாமிங்கஸ் என்ற 11 வயது சிறுவனுக்கு சூரிய ஒளி என்றாலே அலர்ஜி. இதனால் அவர் தன் உடலின் மேல் சூரிய ஒளி படாத வகையில் முக கவசம் மற்றும் ஆடைகளை அணிந்தே வெளியில் சென்று வருகிறார்.

மில்லியனில் ஒருவருக்கு மட்டுமே வரும் ஜெரோடெர்மா பிக்மெண்டோசம் (*xeroderma pigmentosum*) என்ற அரியவகை நோயால் இவர் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் தோல் புற்றுநோயால் எளிதில் உருவாகக் கூடும். கடுமையான வெடிப்பு, வறண்ட சருமம் மற்றும் தோல் நிறமியில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை ஜெரோடெர்மா பிக்மெண்டோசம் நோயின் அறிகுறிகளாகும். மேலும் காது கேளாமை, வலிப்பு மற்றும் கண்புரை ஆகியவற்றிற்கும் இது வழிவகுக்கும்.

இதுதொடர்பாக, பால் டாமிங்கஸ் கூறுகையில், நான் பகலில் வெளியே செல்வேன். அதற்கு பாதுகாப்பு ஆடைகளை அணிந்து செல்ல வேண்டும். நீண்ட சட்டை, தொப்பிகள், கண் கண்ணாடி மற்றும் முகக் கவசம் ஆகியவற்றை கட்டாயம் அணிந்து செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

எப்போதும் முக கவசம் உள்பட நீண்ட சட்டை அணிந்து செல்லும் சிறுவனை அப்பகுதி மக்கள் ஆச்சர்யத்துடன் பார்த்து வருகின்றனர்.

## உலகத்திற்கு அமைதியை கொண்டு வருவேன்: ஜெலன்ஸ்கியிடம் உறுதியளித்த டிரம்ப்



வாஷிங்டன், ஜூலை 22

அமெரிக்காவில் வரும் நவம்பரில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சிக்கான வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தேர்தலை முன்னிட்டு பல்வேறு வெளிநாட்டு தலைவர்களிடம் டொனால்டு டிரம்ப் ஆதரவு கேட்டு பேசி வருகிறார்.

இந்நிலையில், அதிபர் வேட்பாளரான டிரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன் தொலைபேசி வழியே பேசினார்.

இதுதொடர்பாக டிரம்ப் வெளியிட்ட சமூக ஊடக செய்தியில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும், நானும் தொலைபேசி வழியே பேசிக் கொண்டோம். எங்களுடைய உரையாடல் நன்றாக இருந்தது.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான குடியரசு கட்சிக்கான வேட்பாளராக நியமிக்கப்பட்டதற்காக எனக்கு அவர் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

என்னை தொடர்பு கொண்டதற்காக அதிபர் ஜெலன்ஸ்கியை பாராட்டுகிறேன். அடுத்த அமெரிக்க அதிபராக உலகத்திற்கு நான் அமைதியை கொண்டு வருவேன்.

பல உயிர்களை பலி வாங்கி, எண்ணற்ற குடும்பத்தினரை துன்பத்தில் ஆழ்த்திய போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என பதிவிட்டுள்ளார்.

இந்தஉரையாடலின்போதுடிரம்ப்மீதுநடந்தபடுகொலைமுயற்சிக்கான தாக்குதலுக்கு ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு காஷ்மீரில் நில அதிர்வு ரிக்டர் அளவில் 3.5ஆக பதிவு



டெல்லி, ஜூலை 22

ஜம்மு காஷ்மீர் மாநிலம் கிஷ்த்வாரில் 3.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் இன்று மாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அப்பகுதி மக்கள் பீதி அடைந்தனர். அதிகாரபூர்வ ஆதாரங்களின்படி, நிலநடுக்கம் மாலை 5.34 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் இதுவரை உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என தகவல் வெளியானது.

# சிவகங்கை மாவட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம், காளையார்கோவில் வட்டத்தில் நடைபெறவுள்ளது: மாவட்ட கலெக்டர் தகவல்

சிவகங்கை, ஜூலை 22

அரசாணை (நிலை) எண்:22 நாள்: 29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, வருகின்ற 24.07.2024 அன்று காளையார்கோவில் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் நடைபெற உள்ளது.

மேலும், அன்றைய தினம் பிற்பகல் 04.30 மணி முதல் 06.00 மணி வரை பொதுமக்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் காளையார்கோவில் வட்டம் தெற்கு ரத வீதி, உமையாள் ராமசாமி மஹாலில் நடைபெற உள்ளது. மேற்படி கலந்தாய்வு கூட்டத்தில், பொது மக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு



திருவண்ணாமலை, ஜூலை 22

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், (20.07.2024) கிரிவலப்பாதையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஆடிமாத பௌர்ணமியை முன்னிட்டு வெளிமாநில மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த பக்தர்கள் கிரிவலம் வருகின்றனர்.


அதனை தொடர்ந்து கிரிவலப்பாதையில் பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடைபாதையில் தற்காலிக கொட்டகைகள், கடைகள் மற்றும் கடைகளுக்கு முன்பாக இருக்கைகள் போட்டு நடைபாதை முழுவதையும் ஆக்கிரமிப்பு செய்து பக்தர்கள் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதை பார்வையிட்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார். முன்னதாக கிரிவலப்பாதை காஞ்சி ரோடு அருகே எதிர்பாராத விதமாக ஆட்டோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு காயமடைந்த முதியவரை மீட்டு 108 அவசர ஊர்தியில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அனுப்பி வைத்தார்.

இதனை தொடர்ந்து, கிரிவலப்பாதையில் பக்தர்களிடம் மாற்றுத்திறனாளிகள் யாசகம் கேட்பதை கண்டறிந்து, அவர்களின் மாற்றுத்திறனாளி அட்டை, ஆதார் அட்டை குறித்து கேட்டறிந்து இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தினார்.

மேலும் கிரிவலப்பாதையில் குழந்தைகளை வைத்து யாசகம் பெறும் நபர்களை கண்டறிந்து, அவர்களின் விவரங்களை கேட்டறிந்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம், 2015ன் கீழ் காவல்துறை மூலமாக அவர்கள் மீது விசாரணை செய்து சட்டப்படி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேங்கிகால் ஊராட்சி பகவத்சிங் நகரில் உள்ள கழிப்பறையை பார்வையிட்டு தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்று ஆய்வு செய்து, கட்டண முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

# கன்னியாகுமரி மாவட்டதின் புதிய ஆட்சியராக அழகு மீனா பதவியேற்பு



கன்னியாகுமரி ஜூலை 22

கன்னியாகுமரி மாவட்டத்தின் 53 வது மாவட்ட ஆட்சியராக அழகு மீனா நேற்று குமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்று கொண்டார். குமரி மாவட்ட மக்களுக்கு தமிழக அரசின் திட்டங்கள் 100 சதவீதம் சென்றடையவும் பொது மக்கள் எளிதில் அணுகும் விதமாகவும் 24 மணிநேரம் பணியாற்ற உள்ளதாகவும் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட ஆட்சியர் தெரிவித்தார். தமிழக முழுவதும் மாவட்ட ஆட்சியர்கள் மாற்றம் நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டதில் 52 வது ஆட்சியராக பணியாற்றி வந்த ஶ்ரீதர் இந்து அறநிலையத்துறை ஆணையராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதனை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி ஆணையராக இருந்த அழகு மீனா கன்னியாகுமரி மாவட்டத்தில் 53வது ஆட்சியராக நியமிக்கப்பட்டார். நேற்று காலை நாகர்கோவிலில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அழகு மீனா பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு இடம் மாறுதலாகி செல்லும் ஶ்ரீதர் அரசு கோப்புகளை ஒப்படைத்தார். சக அதிகாரிகள் புதிய ஆட்சியருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஆட்சியர் அழகு மீனா கூறுகையில் மாவட்ட மக்களுக்கு தமிழக அரசு திட்டங்கள் பொதுமக்களுக்கு 100 சதவீதம் சென்றடைய பணியாற்றுவேன். மக்கள் எளிதில் அணுகும் விதமாக 24 மணி நேரம் மக்களுக்காக பணியாற்ற நாங்கள் இருக்கிறோம். மாவட்டத்தின் முக்கியமான பணிகள் குறித்து ஆட்சியர் கூறியுள்ளார் அதனை சிறப்பாக செயல்படுத்துவோம். அனைத்து அதிகாரிகளுடனும் ஆலோசித்து அனைத்து பணிகளையும் மேற்கொள்வோம். என தெரிவித்தார்.

# சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழு ஆய்வுப் பணியில் பொது பிரச்சனைகள் குறித்து மனுக்கள் அனுப்பலாம்

இராமநாதபுரம், ஜூலை 22

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழு ஆய்வுப் பணியில் ஈடுபட உள்ள நிலையில் பொது பிரச்சனைகள் குறித்து மனுக்கள் அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 20242025 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழு இராமநாதபுரம் மாவட்டத்தில் விரைவில் கூடுவதென முடிவு செய்துள்ளது. இதனையொட்டி மேற்குறிப்பிட்ட மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தனிப்பட்ட நபரோ, சங்கங்களோ அல்லது நிறுவனங்களோ தீர்க்கப்பட வேண்டிய பொது பிரச்சனைகள் குறைகள் குறித்து மனுக்களை (ஐந்து நகல்கள் தமிழில் மட்டும்) மனுதாரர், மனுதாரர்கள் தேதியுடன் கையொப்பமிட்டு தலைவர், மனுக்கள் குழு, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை, சென்னை 600 009 என்ற முகவரிக்கு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5ம் தேதிக்குள் அனுப்பலாம்.

மனுக்கள் கண்ணியமான வாக்கியத்தில் இருத்தல் வேண்டும். பல ஆண்டுகளாக அரசு அலுவலகங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பொது பிரச்சனைகள் குறித்ததாக மனுக்கள் இருக்கலாம். மனுக்கள் ஒரே ஒரு பிரச்சனையை உள்ளடக்கியதாகவும் ஒரே ஒரு துறையை சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். மனுக்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் ஒன்றினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். ஆனால், மனுவில் உள்ள பொருள் கீழ்க்கண்டவைகளாக இருத்தல் கூடாது: தனிநபர் குறை, நீதிமன்றத்தின் முன் வழக்கில் உள்ள பொருள், வேலை வாய்ப்பு, முதியோர் ஓய்வூதியம், பட்டா மற்றும் அரசு வழங்கும் இலவச உதவிகள் வேண்டுதல், வங்கி கடன் அல்லது தொழில் கடன் வேண்டுதல், அரசு பணியில் மாற்றம் வேண்டுதல், அரசு அலுவலர்களின் குறைகளை வெளிப்படுத்துதல் போன்ற பொருள் குறித்த மனுக்கள் இருத்தல் கூடாது.

சட்டமன்ற பேரவை விதிகளிலும் வரம்பிற்கும் உட்பட்ட மனுக்களை மனுக்கள் குழு மாவட்டத்திற்கு வரும்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் ஒரே மனுதாரர் பல மனுக்களை அனுப்பி இருந்தாலும் குழு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதும் ஒரு மனு மட்டும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். அவ்வமயம், மனுதாரர் முன்னிலையில் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனுவில் உள்ள பொருள் குறித்த உண்மை நிலவரம் கேட்டறியப்படும். இது குறித்து, மனுதாரர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து குழு ஆய்வு செய்யும் நாளில் தகவல் தனியாக அனுப்பப்படும்.

ஆகஸ்ட் திங்கள் 5ம் தேதிக்கு பின்னர் பெறப்படும் மனுக்கள் குழுவின் ஆய்வற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்ச்செம்மல் விருதிற்கு தமிழ் வளர்ச்சித் துறையின் விண்ணப்பங்கள் வரவேற்பு: மாவட்ட கலெக்டர் தகவல்

தென்காசி, ஜூலை 22

தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களைக் கண்டறிந்து அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்ச்செம்மல் என்னும் பெயரில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் இவ்விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருதுக்கு தெரிவு செய்யப்படுவோர் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூ.25,000/ (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) தகுதியுரையும் வழங்கப்பெறும்.

இவ்வகையில் 2024 ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விண்ணப்பப்படிவங்கள் தென்காசி மாவட்டத்திலுள்ள தமிழ் ஆர்வலர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. விருதுக்குரிய விண்ணப்பப் படிவத்தை தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தமிழ் செம்மல் விருதுக்கு விண்ணப்பிக்கும் தமிழ் ஆர்வலர்கள் விருதுக்கான விண்ணப்பத்தினை இருபடிகளில் உரியவாறு நிறைவு செய்து தன் விவரக்குறிப்பு, நூல்கள், கட்டுரைகள் ஏதேனும் வெளியிடப்பட்டிருப்பின் அவை பற்றிய விவரங்களை (பட்டியலோடு ஒவ்வொன்றிலும் இருபடிகள் இணைக்கப்பட வேண்டும்). தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகளில் ஏதேனும் பொறுப்பில் அல்லது உறுப்பினராக இருப்பின் அதுபற்றிய விவரம், விருதுக்குத் தகுதியாக குறிப்பிடத்தக்கப் பணிகள் தமிழறிஞர்கள் இருவரின் பரிந்துரைக் கடிதம், மாவட்டத்தில் செயல்படும் தமிழ் அமைப்புகளின் பரிந்துரைக் கடிதம், ஆதார் அட்டை ஒளிப்படி, குடும்ப அட்டை ஒளிப்படி மற்றும் இரண்டு கடவுச்சீட்டு அளவிலான நிழற்படங்களுடன் ஆற்றிய தமிழ்ப்பணிகளுக்கானச் சான்றுகளையும் இணைத்து உரிய விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்து 10.08.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ஊரக வளர்ச்சி முகமை பழைய கட்டிடத்தில் முதல் தளத்தில் இயங்கி வரும் மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சலிலோ அனுப்பி வைக்கலாம் என மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர், தெரிவித்துள்ளார்.

# அழகர் கோவிலில் தேரோட்டம் திருவிழா: பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடி தேரை வடம் பிடித்து இழுத்தனர்



மதுரை:ஜூலை 22

மதுரை மாவட்டத்தில் அழகர்மலை அடிவாரத்தில் திருமாலிருஞ்சோலை, தென்திருப்பதி என்று புகழப்படும் 108 வைணவ தலங்களில் ஒன்றான கள்ளழகர் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் ஆடிப் பெருந்திருவிழா சிறப்புடையதாகும். இந்த விழா கடந்த 13ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. நாள்தோறும் ஸ்ரீதேவி, பூதேவி, சமேத கள்ளழகர் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார். பல்வேறு வாகனங்களில் எழுந்தவருகிறது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடி தேரை வடம் பிடித்து இழுத்து வருகின்றனர். இன்று இரவில் புஷ்ப பல்லக்கு சேவை நடைபெறும்ருளி வீதி உலா வந்தார். முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்று அதனைத் தொடர்ந்து தீர்த்தவாரி, 23ந் தேதி உற்சவ சாந்தி நடக்கிறது. 4ந் தேதி ஆடி அமாவாசை விழா நடைபெறும். இரவு கருட வாகனத்தில் பெருமாள் எழுந்தருள்கிறார். அத்துடன் ஆடிப்பெருந்திருவிழா நிறைவு பெறுகிறது. ஏற்பாடுகளை அறங்காவலர் குழுவும், கோவில் நிர்வாகமும் செய்து வருகின்றன.

# முட்டத்தூரில் இலவச கண் சிகிச்சை முகாம்



விழுப்புரம், ஜூலை 22

விக்கிரவாண்டி வட்டம்.முட்டத்தூர், ஒய்க்காப் மேனிலைப்பள்ளியில் விழுப்புரம் சங்கமம் லையன்ஸ் சங்கம். புதுவை, அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. லயன்ஸ்சங்கநிர்வாகிகள், மருத்துவர் மற்றும் செவிலியர்களுடன்.முட்டத்தூர் ஒய்க்காப் மேனிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியரும், விழுப்புரம் கல்வி மாவட்ட ஜே.ஆர்.சி கன்வீனர் முனைவர் ம.பாபு செல்வதுரை தன்னார்வ களப்பணியாற்றினார். இதில் சுமார் 200 பொது மக்கள் பயனடைந்தனர்.

# துணை முதலமைச்சர் பதவியை கொடுத்தால் யார் தான் வேண்டாம் என்று சொல்வார்கள்:காட்பாடியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி



காட்பாடி ஜீலை :22

துணை முதலமைச்சர் பதவியை கொடுத்தால் யார் தான் வேண்டாம் என்று சொல்வார்கள். நாடகம் என்றால் என்ன வென்று எடப்பாடிக்கு தெரியுமா அதிமுக கட்சிக்குள் நடப்பது தான் நாடகம்...கூத்துகாரனுங்க என சிரித்தபடியே பதில் திமுக பொதுச்செயலாளர் இருக்கும் கட்சி தான் ஆளும் கட்சி என்னவோ அதுதான் என் கட்சி!! தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக அரசு அணை கட்டுவது குறித்து தீர்ப்பாயம் அமைக்கும்படி உச்சநீதி மன்றத்தில் கேட்டிருக்கிறோம்.

காட்பாடியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டியளித்தார். வேலூர் மாவட்டம் காட்பாடியில் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் காட்பாடியின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் மக்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

கூட்டத்திற்கு பின் செய்திகளிடம் அமைச்சர் துரைமுருகன் கூறுகையில் துணை முதலமைச்சர் பதவியை கொடுத்தால் யார் வேண்டாம் என்று சொல்வார்கள்.

இது எல்லாரும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டிய விஷயம். கூட்டு முயற்சியால் எடுக்கப்பட வேண்டிய விஷயம். காட்பாடி தொகுதியில் மட்டுமல்ல தமிழ்நாட்டில் அனைத்து இடங்களுக்கும் சென்றாலும்,

அதிகாரியிடம் பேசும் பொழுதும் எப்பொழுதும் ஒரே மாதிரியாக தான் இருப்பேன் என்று கூறினார். அம்மா உணவகங்களை முதலமைச்சர் ஆய்வு செய்வது ஒரு நாடகம் என எடப்பாடி பழனிச்சாமி கூறியுள்ளாரே என செய்தியாளர்கள் கேட்டதற்கு? நாடகம் என்றால் என்ன வென்று எடப்பாடிக்கு தெரியுமா அதிமுக கட்சிக்குள் நடப்பது தான் நாடகம் கூத்துகாரனுங்க என சிரித்தபடியே பதில் பதிலளித்தார். மின் கட்டண உயர்வுக்கு பல்வேறு கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர் திமுக பொதுச்செயலாளர் என்ற முறையில் உங்கள் நிலைப்பாடு என்ன என செய்தியாளர்கள் கேட்டதற்கு திமுக பொதுச்செயலாளர் இருக்கும் கட்சி தான் ஆளும் கட்சி

ஆளும் கட்சி என்னவோ அதுதான் என் கட்சி என மின்கட்டண உயர்வுக்கு கட்டாமாக பதில் அளித்தார். கனிமவள துறையில் கொள்ளடிக்கப்பட்டுள்ளதாக அறநிலைத்துறை நீதிமன்றத்தில் வழக்கு தடுத்துள்ளதே என செய்தியாளர்கள் கேட்டதற்கு? அதில் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது என துரைமுருகன் கூறினார்.

தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக அரசு அணை கட்டுவது குறித்து தீர்ப்பாயம் அமைக்கும்படி உச்சநீதிமன்றத்தில் கேட்டிருக்கிறோம்.

இது குறித்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து இருக்கிறோம். இந்த வழக்கில் கர்நாடகா அரசு 2 அல்லது 3 தடவை பேசி பார்க்கிறோம் அவசரப்பட்டு நீங்கள் தீர்ப்பாயத்தை அமைக்க கூடாது என்று உச்ச நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டார்கள் அதன் அடிப்படையில் தான் அந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாயம் அமைப்பதில் நாங்கள் அதில் உறுதியாக உள்ளோம். காரணம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது நல்ல திட்டம் தான். ஆனால் பிடிவாதக்காரர்களோடு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்பது முடியாத காரியம்.

இதுவரை கர்நாடக அரசுடன் 50 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு தான் தீர்ப்பாயத்தை அமைக்க கேட்டுள்ளோம்.

பேச்சுவார்த்தை மூலம் எந்த முடிவும் எட்டாது என வே தான் தீர்ப்பாயத்தை அமைக்க கேட்டுள்ளோம். முல்லைப் பெரியாறு அணை நேற்று கண்காணிப்பு குழு ஆய்வு செய்யப்பட்டது. அதில் தண்ணீர் கசிவு ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளார்களே என செய்தியாளர்கள் கேட்டதற்கு எல்லா அணைகளிலும் சிறிதளவு தண்ணீர் கசிவு ஏற்படத்தான் செய்யும். இது ஒரு பிரச்சினையே அல்ல. கொடுத்தால் யார் தான் ஏற்க மாட்டார்கள் என்று பதில் அளித்தார். இதில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்குமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணைமேயர் எம்.சுனில் குமார், 1வது மண்டலகுழுதலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, பொது குழு உறுப்பினர் லோகநாதன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஜி.ரவிக்குமார், 5வது வார்டு வட்ட செயலாளர் பி.விநாயகம், மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திட்டக்குடியில் கல்வி விழிப்புணர்வு பேரவை சார்பில் மாநில ஆலோசனை கூட்டத்தில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை நடத்தப்படும் என தீர்மானம்



திட்டக்குடி.ஜூலை.22:

திட்டக்குடியில் கல்வி விழிப்புணர்வு பேரவை சார்பில் மாநில ஆலோசனைகூட்டத்தில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை நடத்தப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் மாவட்டம் திட்டக்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கூட்டரங்கில் கல்வி விழிப்புணர்வு பேரவை மாநில ஆலோசனை கூட்டம் நிறுவனத் தலைவர் வை. பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆசிரியர் வீரராஜன் அனைவரையும்வரவேற்றார். ஆசிரியர் லட்சாதிபதி கூட்டத்தை பேராசிரியர் பாஸ்கர் எழுத்தாளர் இளமாறன் ஆசிரியர்கள் சிவசுப்பிரமணியன் கருப்பையா, ராபர்ட் பெஞ்சமின் பெருஞ்சித்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர்கள் சமூகப் பற்றாளர்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். அப்போது பத்துக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது . அதில் கூறியிருப்பதாவது: ஒவ்வொரு கிராமத்திலும் 10 மற்றும் 12ம் வகுப்பில் முதல் பதிப்பின் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுவழங்கப்படும். இந்த ஆண்டு எம்பிபிஎஸ் முடித்த மாணவர்களுக்கு பரிசுவழங்கப்படும். சமூக ஆர்வலர்களுக்கு ஆண்டு தோறும் பரிசு வழங்கப்படும். திட்டக்குடி அரசு கல்லூரி சிறந்த மாணவ மாணவிகளுக்கு கௌரவப்படுத்தி ஊக்கப் பரிசு வழங்கப்படும் போதை பழக்க வழக்கங்களில் ஈடுபடாத வண்ணம் போதை பொருளின் விளைவுகளையும் அதன் பேராபத்தையும் விளக்கி விழிப்புணர்வு நடத்தப்படும். கல்வி விழிப்புணர் பேரவையின் சார்பில் இக் Calculation முதல் UPSC TNPC UGC NEET JEET போன்ற போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். பெற்றோர்கள் இழந்த மிகவும் வறுமையில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குகல்வி சார்ந்த உதவிகள் கல்வி விழிப்புணர்வு பேரவையின் சார்பில் வழங்கப்படும் என்று தீர்மானத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதில் ஆசிரியர்கள் பன்னீர்செல்வம் ரவி வீரமணி நீலகண்டன், தங்கதுரை பள்ளி தாளாளர் ஜெய்சங்கர் ஆசிரியர் பயிற்றுநர் பிரபா அரசு கல்லூரி பேராசிரியர் வீரபாண்டியன் கல்வி விழிப்புணர்வு பேரவை நகர அமைப்பாளர் சக்திவேல் உள்ளிட்ட திரளாக கலந்து கொண்டு உடன் இருந்தனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் நாச்சிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டத்தின் கீழ் இலவச சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து நல பெட்டகங்களை வழங்கினார்.

# வேலூர் மாவட்டம் அம்மா உணவகத்தின் நற்பெயரை கெடுக்கின்ற நோக்கத்தில் செயல்பட விடாமல் முடக்குகிறது திமுக: அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன் துரைமுருகனுக்கு காட்பாடியில் பதிலடி



வேலூர் மாவட்டம் அம்மா உணவகத்தின் நற்பெயரை கெடுக்கின்ற நோக்கத்தில் செயல்பட விடாமல் முடக்குகிறது திமுகமக்களின் பார்வை அதிமுகவின் பக்கம் திரும்பி உள்ளது இதை திசை திருப்புவதற்காகவே முதல்வர் அம்மா உணவகத்தை ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

துரைமுருகன் நாடகத்தில் இருந்து வந்தவர் ஆகையால் அவர் எதைப் பார்த்தாலும் நாடகமாக தான் தோன்றும்என அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன் துரைமுருகனுக்கு காட்பாடியில் பதிலடி வேலூர் மாவட்டம் காட்பாடி பகுதியை சேர்ந்த தொழிலதிபர் சேகர் ரெட்டியின் தந்தை ஜெகன்நாதன் ரெட்டிகடந்த11.07.2024 அன்று உயிரிழந்தார் இந்நிலையில் இன்று அவரது நினைவேந்தல் நிகழ்ச்சி காட்பாடி காந்தி நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இதில் அதிமுகமுன்னாள்அமைச்சர் வைகைச் செல்வன் கலந்து கொண்டு உயிரிழந்தவரின் உருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

அதிமுகவினர் கட்சிக்குள் நடப்பது தான் நாடகம் என அமைச்சர் துரைமுருகன்கூறியுள்ளார்என செய்தியாளர்கள் கேட்டதற்கு அம்மா உணவகத் திட்டம் என்பது ஒரு அட்சய பாத்திரம் போல ஏழை எளியோர் மாத்திரமல்லாது அனைத்து தரப்பினரும் அந்த அறுசுவை உணவை உண்ணுகிற ஒரு நிலை கொரோனா காலகட்டத்தில் இருந்து தொடர்ந்து இன்று வரை நிகழ்ந்து கொண்டிருக்கிறது ஆனால் அம்மா உணவகத்திற்கு நல்ல பெயர் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக தொடர்ந்து திமுக திட்டமிட்டு அந்த நற்பெயரை கெடுக்கின்ற நோக்கத்தில் செயல்பட விடாமல் முடக்கி விடுகின்றது இப்பொழுது பிரச்சனை மேல் பிரச்சனை எழுந்திருக்கிறது ஆம்ஸ்ட்ராங் படுகொலை கள்ளக்குறிச்சி 70க்கும் மேற்பட்டோர் மரணம் மக்களின் பார்வை அதிமுகவின் பக்கம் திரும்பியுள்ளது இதை எப்படி திசைதிருப்பலாம் என்பதற்காக திமுகதலைவர்ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வில் நடத்தியது ஒரு நாடகம் என்றே என நானும் கூறுகிறேன் இதுதான் நாடகம் நாங்கள் போடுவது நாடகமல்ல துரைமுருகன்உங்கள்கட்சிக்குள் நடப்பது தான் நாடகம் என மீண்டும் அழுத்தமாக செய்தியாளர்கள். திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் நாடகத்தில் இருந்து வந்தவர் அவர் எதைப் பார்த்தாலும் நாடகமாக தான் தோன்றும் ஆம்ஸ்ட்ராங் படுகொலையை தொடர்ந்து அதிமுகவினர் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு தொடர் அதிமுகவினர் கிடையாது சந்தேகத்தின் பேரில் சில பேர் கைது

செய்யப்பட்டு ள்ளார்கள் அது யாராக இருந்தாலும் அதிமுகவை சேர்ந்தவர்கள் அடிப்படை உறுப்பினர்களில்இருந்து நீக்கப்பட்டுள்ளனர் அதை தான் நீங்கள் பார்க்க வேண்டும் தொடர்ந்து தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது எனசெய்தியாளர்கள் கேட்டதற்கு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு இழந்துள்ளது இரண்டு மாதத்தில் 595 கொலைகள் தமிழகத்தில் நடந்துள்ளது இதையெல்லாம் பார்க்க வேண்டிய முதலமைச்சர் கவனிக்க தவறிவிட்டார் என அதிமுக குற்றம் சாட்டுகிறது. மின் கட்டண உயர்வுக்கு உதய் மின்திட்டத்தில் கையெழுத்திட்டது தான் காரணம் என திமுகவினர் குற்றம் சாட்டுகின்றனர் என செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆட்சிக்கு வந்து மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறது திமுக இந்த மின் கட்டணத்தை உயர்த்தினால் தான் மத்திய அரசில் இருந்து நிதி பகிர்வை பெற முடியும் என்பதற்கான ஒரு சூழ்நிலையில் தான் மின் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறோம் என்று மின்பகிர்மான கழகம் கூறியுள்ளது இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் அவர்கள் கடந்த முறை மின் கட்டண உயர்வு மூலமாக 54 ஆயிரம் கோடி லாபம் பெற்றிருக்கிறது இதற்கு என்ன கணக்கு மின் கட்டணத்தை உயர்த்த கூடாது இது அதிமுகவின் கருத்து மாத்திரம் அல்ல தமிழ் நாட்டில் ஒட்டுமொத்த மக்களின் கருத்து ஆகவே சாதாரணமாக 300 முதல் 500 ரூபாய் என கட்டிக் கொண்டிருந்தவர்கள் இப்பொழுது 1200 லிருந்து 1300 வரை கட்டிக் கொண்டிருக்கின்றனர் ஒரு வாடகை கொடுக்கும் அளவிற்கு மின்கட்டணம் உயர்ந்துள்ளது மக்களை நசுக்குகின்ற செயலை திமுக செய்து கொண்டிருக்கிறது இதற்குத்தக்க பதிலடி வருகின்ற சட்ட மன்ற தேர்தலில் மக்கள் தருவார்கள் எனக் கூறினார்.



ஈரோடு மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் வங்கியாளர்கள் கல்விக்கடன் வழங்குவது தொடர்பாக கல்லூரி நிர்வாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பயிற்சி மற்றும் கலந்தாசோசனை கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

# சுரண்டை நகராட்சி அலுவலர் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு

தென்காசி, ஜூலை.22

தென்காசி மாவட்டம்,சுரண்டையில் கட்டிட வரைபட அனுமதிக்கு லஞ்சம்கேட்டநகராட்சி அலுவலர் உள்பட 2 பேர் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

தென்காசி மாவட்டம் சுரண்டை அண்ணா நகரைச் சேர்ந்தவர் முத்து பாண்டி யன் (வயது 71), இவர் ரெயில் வேயில் என்ஜின் டிரைவராக பணியாற்றி ஒய்வு பெற்றவர். இவருடைய மகன் ராகுல். இவர் தனது வீட்டின் அருகில் மற்றொரு வீடு கட்டி வருகி றார். அந்த பணியை முத்து பாண்டியன் மேற்பார்வை யிட்டு வருகிறார்.

சம்பவத்தன்று இவரது வீட் டுக்கு சுரண்டை நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் செய் யது அலி உள்ளிட்ட 2 பேர் சென்றனர். அவர்கள் முத்துப்பாண்டியனிடம் புதிய வரைபட அனுமதி வாங்கிவிட்டீர்களா?,வாங்கவில்லையெனில், அதனை விரைவில் வாங்கி விடுங்கள் என்று கூறி சென்றனர்.

இதற்கிடையே முத்து பாண்டியன் ஆன்லைனில் கட்டிட வரைபட அனுமதி கோரி விண்ணப்பித்தது தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து அவர் மீண்டும் கட்டிட வரைபட அனுமதி கோரி ஆன்லைனில் கட்டணத்தையும் செலுத்தி ரசீதுடன் சுரண்டை நகராட்சி அலுவலகத்துக்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கிருந்த நகரமைப்பு ஆய்வாளர் செய்யதுஅலி கட்டிட வரைபட அனுமதி வழங்குவதற்கு ரூ.20 ஆயிரம் லஞ்சம் கேட்டதாகவும், அந்த பணத்தை காஜா என்பவரிடம் கொடுக்கும்படி கூறியுள்ளார். அதன்படி காஜா முத்துப்பாண்டி யனிடம் ரூபாய் 20 ஆயிரத்தை தன்னிடம் கொடுக்குமாறு கேட்டுள்ளார்.

இந்நிலையில் லஞ்சம் கொடுக்க விரும்பாத முத்துபாண்டியன் இதுபற்றி தென்காசி மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் செய்தார்.அதன்பேரில், சுரண்டை நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் செய்யது அலி மற்றும் காஜா ஆசியோர்மீது லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர்ஜெயஸ்ரீவழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது..

தென்காசி மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் இது போன்று 4 வழக்குகள்பதிவுசெய்துள்ளதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்தனர்.

# தோரணமலை முருகன் கோவிலில் பௌர்ணமி கிரிவலம்: கூட்டு பிரார்த்தனை



தென்காசி, ஜூலை 22

தென்காசி மாவட்டம் , தென்காசி கடையம் சாலையில் அமைந்துள்ள தோரணமலை ஸ்ரீ முருகன் கோவில் புராண சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் உடையதாகும். இக்கோவிலில் மாதமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுவது. இன்று ஆடி மாத பௌர்ணமியையொட்டி கிரிவலம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள். கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, நோய் நொடியின்றி பக்தர்கள்நலமுடன் வாழ வேண்டும்,உள்நாட்டில் மட்டுமல்லாது அயல்நாட்டில் படிக்கும் இந்திய மாணவர்கள் பாதுகாப்புடன் படித்து முடிக்க வேண்டும் , பயங்கரவாதம் ஒழிந்து பாரத நாடு வளம் கண்டு உலக அரங்கில் வெற்றி வலம் வர வேண்டும்,நாட்டில் நல் மழை பொழிந்து விவசாயம் தழைக்கவும், விவசாயி செழிக்கவும் வேண்டும்,பீடி சுற்றும் பெண்கள் முதல் ஐ டி வேலை செய்யும் பெண்கள் வரை பீடில்லா ஏற்றம் தர வேண்டும், இளைஞர்கள் போதை பாதையில் சென்றிடாது தடுத்து, அனைவருக்கும் உதாரணமாக திகழ்ந்திட வேண்டும், கோர விபத்திலிருந்தும், கொடிய நோயிலிருந்தும் நாட்டு மக்களை காத்து நலமுடன் வாழ வேண்டும் எனவும் ஸ்ரீ முருகனை வேண்டி கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் மற்றும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் செண்பகராமன் செய்திருந்தார்

# துறையூரில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம்





துறையூர் ஜூலை 22

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வழங்கல் அலுவலர் மீனாட்சி தலைமையில் எரிவாயு நுகர்வோர் குறை தீர் கூட்டம் நடைபெற்றது. இதில் வட்ட வழங்கல் அலுவலர் சுந்தரி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் எரிவாயு ஏஜென்சியினர், தனியார் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். தொடர்ந்து மற்றொரு உபயோகிப்பாளர் முகவரி மாற்றம் செய்தும் சரியான முகவரியில் எரிவாயு சிலிண்டர் தரவில்லை என்றும் இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானதாக தெரிவித்தார். அவருக்கு அவர் விரும்பும் ஏஜென்சில் மாற்றம் செய்து தருவதாக கூறப்பட்டது. தொடர்ந்து பாதுகாப்பான முறையில் உள்ள புதிதாக வடிவமைக்கப்பட்ட 5 கிலோ மற்றும் 10 கிலோ எடையுள்ள சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்படுவதாகவும் ,அதை எப்பொழுது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்றும் ஏஜென்சிகள் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் வருவாய் ஆய்வாளர் வருவாய் ஆய்வாளர் கார்த்திக் மற்றும் சமூக ஆர்வலர்கள் புத்தனாம்பட்டி சரவணன் , தோசை சின்ன சாமி, கவுன்சிலர் சதீஸ்குமார் ,எரிவாயு உபயோகிப்பார்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வேட்டவலம் அருள்மிகு ஸ்ரீ பச்சையம்மன் சமேத ஸ்ரீ மன்னார் சாமி கோவிலில் ஆடி மாத பௌர்ணமி விழா





வேட்டவலத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பச்சையம்மன் சமேத ஸ்ரீ மன்னா சாமி திருக் கோவிலில் ஆடி மாத பௌர்ணமி விழா சிறப்பாக நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் அருள்மிகு ஸ்ரீ பச்சையம்மன் சமேத மன்னர் சாமி திருக்கோவிலில் மாதந்தோறும் பௌர்ணமி பூஜை நடைபெறுகிறது அதேபோல் இந்த மாதம் ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த மாதம் என்பதால் மூலவர் பச்சையம்மனுக்கு பால் தயிர் ,இளநீர் ,பன்னீர் விபூதி ,சந்தனம் பஞ்சாமிர்தம் போன்றவற்றால் சிறப்பு அபிஷேகமும் வில்வம், அருகம் புல், பூ இவற்றால் அலங்காரம் செய்யப்பட்டு அம்மன் பற்றிய பாடல்கள் துதிக்க மகா தீபாராதனையுடன்பூஜை நடைபெற்றது.

பின்னர் உற்சவமூர்த்திக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு கோவிலின் உள் பிரகாரத்தில் வீதி உலா நடைபெற்றது. நெய்வேத்தியமாக வெண்பொங்கல்கடலை படையலிட்டு பொதுமக்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது பின்னர் கோவில் நிர்வாக சார்பில் பொதுமக்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகமும் , பௌர்ணமிவிழாகுழுவினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்து இருந்தனர்.

# ஆடி மாத பவுர்ணமி யையொட்டி திருச்செந்தூரில் லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம்: அறங்காவலர் குழு தலைவர் அருள் முருகன் தலைமையில் ஆய்வு



திருச்செந்தூர், ஜூலை 22

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடாகதிருச்செந்தூர் விளங்கி வருகிறது. தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்து தினமும் பக்தர்கள் வந்து திருச்செந்தூர் கடலில் புனித நீராடி சுப்பிரமணிய சுவாமியை தரிசனம் செய்து செல்கின்றனர். அண்மைக்காலமாக திரையுலகினர், விளையாட்டு நட்சத்திரங்கள் திருச்செந்தூர் கோயிலுக்கு வந்து தரிசனம் செய்து வருவது அதிகரித்து வருகிறது. இதைத் தவிர பௌர்ணமி தினத்தில் திருச்செந்தூரில் சாமி தரிசனம் செய்ய பக்தர்கள்கூட்டம் அலைமோதுகிறது. பவுர்ணமி தினத்தன்று இரவில் கடற்கரையில் படுத்து தூங்கி எழுந்தால் அனைத்து கஷ்டங்களும் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை பக்தர்கள் மத்தியில் நிலவி வருகிறது. இதனிடையே நாளை ஆடி மாத பௌர்ணமியையொட்டி இன்று பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. காலை முதலே பக்தர்கள் சாரை சாரையாக வந்து கடலில் நீராடி சாமி தரிசனம் செய்தனர். நாளைக்குள் சுமார் 4 லட்சம் பக்தர்கள் திருச்செந்தூர் வந்து தரிசனம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி பக்தர்களுக்கு குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள்,பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அறங்காவலர் குழு தலைவர் அருள் முருகன், அறநிலையத்துறை இணை ஆணையர் கார்த்தி, காவல்துறை துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ் ஆகியோர் ஆய்வு செய்தனர். பக்தர்களின் கூட்டம் அலைமோதுவதையொட்டி 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## ரகு தாத்தா.. பெண்கள் மீதான திணிப்பு பற்றியது நடிகை கீர்த்தி சுரேஷ்




தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வரும் கீர்த்தி தற்போது இயக்குனர் சுமன் குமார் எழுதி இயக்கியுள்ள 'ரகுதாத்தா' திரைப்படத்தில் நடித்துள்ளார்.

ஹோம்பலே பிலிம்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்த திரைப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். இப் படத்தின் படப்பிடிப்பு நிறைவுப்பெற்று டீசர் வெளியானது.

காமெடியாகவும் 'இது எல்லாம் மீறி இந்தியை திணித்தே தீரு வோம் என்றால்.. இந்தி தெரியாது போயா' போன்ற இந்தி திணிப்புக்கு எதிராக இடம்பெற்று அழுத்தமான வசனங்கள் டீசரில் இடம் பெற்றது.

இப்படத்தில் கீர்த்தி சுரேஷுடன் எம்.எஸ் பாஸ்கர், தேவ தர்ஷினி மற்றும் பலர் நடித்துள்ளனர். இப்படத்தின் இயக்குனரான சுமன் குமார் இதற்கு முன் ஃபேமிலி மேன் என்ற பிரபல வலைத் தொடருக்கு கதையாசிரியாவார். இப்படம் வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி வெளியாகவுள்ளது. இந்நிலையில், ரகுதாத்தா படத்தின் இசை வெளியீட்டு விழா இன்று சென்னையில் நடைபெற்றது. இந்த விழாவில் நடிகை கீர்த்தி சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது, மேடையில் நடிகை கீர்த்தி சுரேஷ் பேசியதாவது:

ரகு தாத்தா.. பெண்கள் மீதான திணிப்பு பற்றியது. டீசரிலும் பார்த்திருப்பீர்கள். எல்லா விதமான திணிப்பு பற்றியும் தான் இந்த படம்.

இந்த படத்தில் சின்ன மெசேஜ் சொல்ல முயற்சி செய்திருக்ககோம். ஆனால், உபதேசம் சொல்ற மாதிரி இருக்காது. இந்தப் படம் பார்க்கும்போது தெரியும். அதில், இந்தியை படத்தில் டிரை பண்ணியிருக்கோம். இதில் எந்த அரசியல் சாயலும், சர்ச்சைக்குரியதாகவும் எதுவும் இல்லை.

படத்திற்கு வரும் மக்கள், ஜாலியாக படத்தை பார்த்து செல்லும் வகையில் கதை அமைந்திருக்கும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நகுலுக்கு நான் அக்கா அல்ல அம்மா : நடிகை தேவயானி நெகிழ்ச்சிப் பேச்சு!

5656 புரொடக்ஷன்ஸ் சார்பில் டத்தோ. பா.சுபாஸ்கரன் தயாரிப்பில் நகுல் நாயகனாக நடித்து உருவாகி உள்ள படம் வாஸ்கோடகாமா.இப்படத்தை ஆர்ஜிகே இயக்கியுள்ளார். வரும் ஆகஸ்ட் 2 ஆம் தேதி வெளியாகவுள்ள இந்த' வாஸ்கோடகாமா ' திரைப்படத்தின் பாடல்கள் ட்ரெய்லர் வெளியீட்டு விழா இன்று பிரசாத் லேப் திரையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக இயக்குநர் கே. எஸ். ரவிகுமார்,நடிகை தேவயானி கலந்து கொண்டார்கள்.

விழாவில் நடிகை தேவயானி பேசும் போது,

"என் தம்பி நகுல் நடித்த பட விழாவில் கலந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

அவனுக்கு நான் முறையில் அக்கா என்றாலும் வயதில் சின்னவனாக இருப்பதால் அவனை நான் அம்மாவைப் போல் பார்த்துக் கொள்வேன்.அவனுக்கு நான் இன்றும் அம்மாதான்.சின்ன வயதில் இருந்து துறுதுறு என்று இருப்பான். நல்ல திறமைசாலி.

இன்று என் அப்பாவும் அம்மாவும் இல்லை. ஆனால் இங்கே நாங்கள் இருப்பதைப் பார்த்து அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். நான் இங்கே இருப்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் ஆசீர்வாதம் இங்கே நிரம்பி இருப்பதாக நினைக்கிறேன்.எப்போதும் அவனுக்கு ஆதரவாக இருந்த அவர்கள் இப்போதும் இருப்பார்கள் என்று நினைக்கிறேன் "என்று கூறி வாழ்த்தினார் .

நாயகன் நகுல் பேசும் போது,

"எனது வாழ்க்கை எங்கே தொடங்கி எங்கே போகிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. மும்பையில் பள்ளியில் படித்த போது அக்கா இங்கே நடிக்க வந்து விட்டார். அவருக்காக, அவர் அழைத்ததால் இங்கு வந்து விட்டோம்.

நான் முதலில் பைலட் ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டு முயன்றேன் . பிறகு விஸ்காம் சேர்ந்தேன். அதுவும் ஒரு காதலுக்காக மாறினேன். அதுவும் நிறைவேறவில்லை.

ராணுவத்தில் சேர ஆசைப்பட்டேன் .அதற்காக எடையெல்லாம் குறைத்தேன்.அதுவும் நடக்கவில்லை .

ஏதோ ஒரு அதிர்ஷ்டம், ஏதோ ஒரு ஆசீர்வாதம் காரணமாக இங்கு வந்து சேர்ந்து விட்டேன்.

ஏதோ ஒரு அதிர்ஷ்டத்தால் தான் பாய்ஸ் படத்தில் நடிக்க வந்தேன். பிறகு காதலில் விழுந்தேன் வந்தது. நான் ஒன்று நினைத்தால் எல்லோரும் இன்னொன்றை என்னிடம் ரசித்தார்கள். நான் பாடலாம் என்றால் அவர்கள் நகுல் நன்றாக ஆடுகிறார் என்றார்கள்.

பல தடைகள் தாமதங்களுக்குப் பிறகு எப்படியோ அடுத்தடுத்த படங்கள். இப்படித்தான் மாசிலாமணி வந்தது, பிறகு வல்லினம் வந்தது.சில மாதங்கள் எந்த வேலையும் இல்லாமல் கூட இருந்தேன் .ஒரு கட்டத்தில் புலம்பதில் பயனில்லை என்று புரிந்தது. எதெது எப்போது நடக்குமோ அதது அப்போது நடக்கும் என்கிற தெளிவு வந்தது.

இரண்டு மணி நேரம் சிரிக்கச் சிரிக்க இந்த வாஸ்கோடகாமா படத்தின் கதையைச் சொன்னார் ஆர்ஜிகே. அதே போல் எடுத்துள்ளார். இதுவரை நான் நடிக்காத டார்க் ஹ்யூமர் கதை இது . சினிமாவில் விமர்சனம் கூடாது என்பது அல்ல ,அது ஆரோக்கியமாக இருக்க வேண்டும். சினிமா நூற்றாண்டு கண்டு விட்டது. இதை நம்பி பலபேர் இருக்கிறார்கள். விமர்சனம் என்கிற பெயரில் சினிமாவை அழித்து விடாதீர்கள்." என்று கூறினார்.




## இசை ஜாம்பவான்கள் வெளியிடும் `நண்பன் ஒருவன் வந்த பிறகு' படத்தின் டிரைலர்




ஹிப்ஹாப் ஆதி இயக்கி நடித்து வெளியான மீசைய முறுக்கு படத்தில் நடித்து பலருக்கும் பரீட்சையமான முகமானார் ஆனந்த். இந்நிலையில் ஆனந்த் தற்பொழுது இயக்குனர் அவதாரத்தை எடுத்துள்ளார்.

ஆனந்த் இயக்கும் இப்படத்திற்கு "நண்பன் ஒருவன் வந்தப் பிறகு" என தலைப்பிடப்பட்டுள்ளது. இப்படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு தயாரித்துள்ளார். இப்படத்தில் ஆனந்த் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடிக்க அவருடன் பவானி ஸ்ரீ, ஆர்ஜே விஜய், மோனிகா, யூடியூபர் இர்ஃபான் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

முழுக்கமுழுக்க இப்படம் இளம் தலைமுறையின் நட்பைப் பற்றி பேசக்கூடியப் படமாக உருவாகியுள்ளது. இப்படத்தில் முக்கியமான இரண்டு பாடலை தனுஷ் மற்றும் ஜிவி பிரகாஷ்குமார் பாடியுள்ளனர்.

திரைப்படம் வரும் ஆகஸ்ட் 2 ஆம் தேதி வெளியாகப்போவதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். படத்தின் டிரைலர் நாளை காலை 11.11 மணிக்கு வெளியிடப்போவதாக படக்குழு அறிவித்துள்ளனர். படத்தின் டிரைலரை தமிழ் சினிமாவின் இசை ஜாம்பவான்களாக திகழும் ஏ.ஆர் ரகுமான், யுவன் ஷங்கர் ராஜா மற்றும் அனிருத் வெளியிடவுள்ளனர்.

## அதர்வா நடிக்கும் DNA படத்தின் படப்பிடிப்பு நிறைவு




நடிகர் அதர்வா, பாணா காத்தாடி, பரதேசி, சண்டிவீரன் போன்ற படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தவர்.

இவர் தற்போது ஒத்தைக்கு ஒத்த போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார்.


அதே சமயம் இவர் எம் ராஜேஷ் இயக்கத்தில் அதிதி சங்கர் கதாநாயகியாக நடிக்கும் புதிய படத்தில் கமிட்டாகி இருக்கிறார். இதற்கிடையில் அதர்வா டிஎன்ஏ எனும் திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் அதர்வா இரட்டை வேடங்களில் நடித்துள்ளார்.

இதில் அதர்வாவுக்கு ஜோடியாக நிமிஷா சஜயன் நடிக்கிறார். இந்த படத்தை நெல்சன் வெங்கடேசன் எழுதி இயக்குகிறார். ஒலிம்பியா மூவிஸ் நிறுவனம் இந்த படத்தை தயாரிக்கிறது. ஏற்கனவே இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி நல்ல வரவேற்பு பெற்றது.

கடந்த 2016ம் ஆண்டு தினேஷ், மியா ஜார்ஜ், நிவேதா பெத்துராஜ் நடிப்பில் வெளியான 'ஒரு நாள் கூத்து' திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் நெல்சன் வெங்கடேசன். அதன் பின்னர் 'மான்ஸ்டர்', 'பர்ஹானா' போன்ற திரைப்படங்களை இயக்கி வரவேற்பை பெற்றார். 'டிஎன்ஏ' படம் ஆக்சன் திரில்லர் பாணியில் உருவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

படத்தின் படப்பிடிப்பு பணிகள் தற்பொழுது நிறைவடைந்துள்ளது. இதுக்குறித்து படக்குழுவினர் புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர். இப்படத்தில் இடம்பெற்றுள்ள 5 பாடல்களை 5 இசையமைப்பாளர்கள் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. திரைப்படம் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ்: இறுதிப்போட்டிக்கு முன்னேறினார் நடால்



ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்வீடனில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி சுற்று ஆட்டங்கள் நடந்து வருகின்றன.

இன்று நடந்த போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால், குரோசியாவின் டுஜே அஜ்டுகோவிச் உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை டுஜே 6-4 என கைப்பற்றினார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக 2வது செட்டை நடால் 6-3 என கைப்பற்றினார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3வது செட்டை நடால் -64 என கைப்பற்றினார்.

இறுதியில் நடால் 4-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்

## இந்திய ஆண்கள் கால்பந்து அணிக்கு தலைமை பயிற்சியாளராக மார்கிஸ் நியமனம்



உலகக் கோப்பை தகுதிச்சுற்றின் இரண்டாவது சுற்றில் இந்திய ஆண்கள் கால்பந்து அணி தோல்வி அடைந்து 3வது சுற்றுக்கு வரத் தவறியது. கத்தார் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளிடம் இந்திய அணி தோல்வி அடைந்தது.

இதனால் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த இகோர் ஸ்டிமாக் கடந்த மாதம் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கிடையே, புதிய தலைமை பயிற்சியாளர் பதவிக்காக 20க்கும் மேற்பட்டோர் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்நிலையில், இந்திய ஆண்கள் கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக ஸ்பெயினைச் சேர்ந்த மனோலோ மார்கிசை நியமனம் செய்தது அனைத்திந்திய கால்பந்து கூட்டமைப்பு.

மனோலோ மார்கிஸ் தற்போது எப்.சி கோவா அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கவெம் ஹாட்ஜ், ஜோஷ்வா அபாரம்: முதல் இன்னிங்சில் முன்னிலை பெற்ற வெஸ்ட் இண்டீஸ்



இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் போட்டி நாட்டிங்ஹாமில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 416 ரன்கள் குவித்தது. அந்த அணியின் ஒல்லி போப் 121 ரன்னும், பென் டக்கெட் 71 ரன்னும், பென் ஸ்டோக்ஸ் 69 ரன்னும் எடுத்தனர்.

வெஸ்ட் இண்டீஸ் சார்பில் அல்ஜாரி ஜோசப் 3 விக்கெட், ஜெய்டன் சீலஸ், சின்க்ளேர், ஹாட்ஜ் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, வெஸ்ட் இண்டீஸ் அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக கிரேக் பிராத்வைட், மிகைல் லூயிஸ் ஆகியோர் களம் இறங்கினர்.

பிராத்வைட் 48, மிகைல் லூயிஸ் 21, கிர்க் மெக்கென்சி 11 ரன் எடுத்து ஆட்டமிழந்தனர். 4வது விக்கெட்டுக்கு கவெம் ஹாட்ஜ் மற்றும் அலிக் அத்தனாஸ் ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடினர். இருவரும் 175 ரன்கள் சேர்த்த நிலையில் அலிக் அத்தானாஸ் 82 ரன்னில் அவுட் ஆனார். மறுபுறம் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய கவெம் ஹாட்ஜ் சதமடித்து அசத்தினார். அவர் 120 ரன்னில் அவுட் ஆனார். இரண்டாம் நாள் முடிவில் வெஸ்ட் இண்டீஸ் அணி 84 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 351 ரன்கள் எடுத்திருந்தது. இந்நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது. ஜேசன் ஹோல்டர் 27 ரன்னும், சின்க்ளேர் 4 ரன்னிலும் அவுட்டாகினர். கடைசி கட்டத்தில் ஜோஷ்வா டா சில்வா பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்தார். 10வது விக்கெட்டுக்கு ஷமார் ஜோசப், ஜோஷ்வா டா சில்வா ஜோடி 71 ரன்கள் சேர்த்தது. இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் முதல் இன்னிங்சில் 457 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் வெஸ்ட் இண்டீஸ் அணி 41 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. ஜோஷ்வா டா சில்வா 82 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். இங்கிலாந்து சார்பில் கிறிஸ் வோக்ஸ் 4 விக்கெட்டும், கஸ் அட்கின்சன், சோயப் பஷீர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

## அருண் கார்த்திக் அதிரடி: நெல்லை அணி 177 ரன்கள் குவிப்பு




8வது டி.என்.பி. எல் டி20 கிரிக்கெட் போட்டி சேலத்தை அடுத்த வாழப்பாடியில் கடந்த 5ம் தேதி தொடங்கியது. முதல் 9 லீக் ஆட்டங்கள் சேலத்திலும், அடுத்த 8 லீக் ஆட்டங்கள் கோவையிலும் நடந்தது.

முதல் 2 சுற்று ஆட்டம் முடிவில் நடப்பு சாம்பியன் கோவை கிங்ஸ் அணி தொடர்ச்சியாக 4 ஆட்டங்களில் வென்று 8 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. முன்னாள் சாம்பியனான சேப்பாக் சூப்பர் சூப்பர் கில்லீஸ் 5 ஆட்டங்களில் ஆடி 3 வெற்றி, 2 தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று 2வது இடத்தில் இருக்கிறது. இதன் 3வது கட்ட லீக் ஆட்டங்கள் நெல்லை சங்கர் நகரில் உள்ள இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவன மைதானத்தில் இன்று தொடங்குகிறது.

இன்றைய ஆட்டத்தில் ஆட்டத்தில் திருச்சி கிராண்ட் சோழாஸ், நெல்லை ராயல் கிங்ஸ் அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற திருச்சி அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி நெல்லை ராயல் கிங்ஸ் முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் அருண் கார்த்திக் அதிரடியாக ஆடி அரை சதம் கடந்தார். அவர் 51 பந்தில் 84 ரன்கள் குவித்தார். ரித்திக் ஈஸ்வரன் 29 ரன்கள் எடுத்தார். இறுதியில், நெல்லை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 177 ரன்கள் எடுத்தது.

திருச்சி அணி சார்பில் சரவணகுமார் 4 விக்கெட்டும், ஆண்டனி தாஸ், அதிசயராஜ் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 178 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் திருச்சி அணி களமிறங்குகிறது.

## மில்லர் கேட்சை பிடித்ததும் எல்லோரும் SKYயிடம் கேட்டது இதுதான்: விவரிக்கும் அக்சர் படேல்



வெஸ்ட் இண்டீசில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி கோப்பை வென்றது. இறுதிப் போட்டியில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.

இறுதிப்போட்டியின் கடைசி ஓவரில் டேவிட் மில்லர் அடித்த பந்தை சூர்யகுமார் யாதவ் கேட்ச் பிடித்தது திருப்புமுனையாக அமைந்தது.

இந்நிலையில், டேவிட் மில்லர் கேட்சை பிடித்ததும் எல்லோரும் சூர்யகுமாரிடம் லைஜ டச் செய்தீர்களா என கேட்டோம் என்றார் அக்சர் படேல்.

இதுதொடர்பாக அக்சர் படேல் தனியார் செய்தி நிறுவனத்திடம் கூறியதாவது:

நான் மிட் விக்கெட்டில் இருந்தேன். மில்லர் பந்தை அடிக்கும்போது இது சிக்சருக்குப் போய்விட்டது என நினைத்தேன்.

ஆனால் சூர்யா கேட்சை பிடித்ததும், எல்லோரும் அவரிடம் கேட்டார்கள் கயிற்றைத் தொட்டீர்களா? என. சூர்யா பாய்க்கு கூட உறுதியாக தெரியவில்லை. முதலில் ஆம், நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன் எனக்கூறிய அவர், சில நொடிகளில் எனக்கு உறுதியாக தெரியவில்லை என்றார்.

ரீப்ளேயைப் பார்த்தபோது 99 சதவீதம் பேர் உலகக் கோப்பையை வென்றோம் என நினைத்தோம்.

அது நெருக்கடியான நிலையில் பிடிக்கப்பட்ட கேட்ச். அப்போது அவர் தனது சமநிலையை தக்கவைத்த விதம் ஆச்சரியமாக இருந்தது என தெரிவித்தார்.



**ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்**

**விளக்கம்:**
ஒப்புரவை அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன் உயிர்வாழ்கின்றவன் ஆவான், மற்றவன் செத்தவருள் சேர்த்துக் கருதப்படுவான்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.